# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குருபரவலசை, நடூர், கோனேரிக்குப்பம் பகுதிகளில் நியாய விலைக்கடைகள்

## அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்



**கிருஷ்ணகிரி,ஜன.05-**

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் பழைய பேருந்து நிலையம் அருகில், பர்கூர் நகர கூட்டுறவு வங்கி கிளை மற்றும் குருபரவலசை, நடூர், கோனேரிக்குப்பம் ஆகிய 3 பகுதிநேர நியாய விலைக்கடைகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கர பாணி , கலெக்டர் ச.தினேஷ் குமார் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் முன்னிலையில் 03.01.2026 அன்று திறந்து வைத்தார்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் பழைய பேருந்து நிலையம் அருகில் பர்கூர் நகர கூட்டுறவு வங்கி கிளை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி நகர கூட்டுறவு வங்கி இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதிப்படி 03.12.1979 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் வங்கி கிளைகள் கட்டிகானப் பள்ளி தலைமை அலுவலகம், பழையப்பேட்டை, தவுலதாபாத், ஓசூர், இராயக்கோட்டை, சூளகிரி, பர்கூர் ஆகிய பகுதிகளில் செயல்பட்டு வருகிறது. இவ்வங்கிகளில் நாளதுவரை 13,873 'அ'' வகுப்பு அங்கத்தினர்கள், ரூ.423 இலட்சம் பங்குத் தொகையுடன் உள்ளனர். இட்டுவைப்புகளின் நிலுவையாக ரூ.23,983 இலட்சமாக உள்ளது.

இவ்வங்கிகள் மூலம் நகைக்கடன்கள் தனிநபருக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. நாளது வரை 15,477 நபர்களுக்கு ரூ.12,670.89 இலட்சம் நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அதேப்போல் வங்கி வீடு அடமானக் கடனாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. நாளதுவரை 736 நபர்களுக்கு ரூ.4,062.33 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், வீடு கட்டும் கடன் ரூ.30 இலட்சம் வழங்கப்படுகிறது. நாளதுவரை 67 நபர்களுக்கு ரூ.379.27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதர கடன்களான சிறுபான்மையினர் கடன், மகளீர் சுய உதவிக்குழு கடன், வியாபாரக்கடன் போன்ற கடன்கள் வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் நல்லாதரவுடன் 31.03.2025 வரை வங்கி ரூ.128.40 இலட்சம் நிகர லாபம் ஈட்டி உறுப்பினர்களுக்கு 14 சதவீதம் பங்கு ஈவுத் தொகை வழங்கியுள்ளது. வங்கி தலைமையகம் உட்பட அனைத்து கிளைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, நகர கூட்டுறவு வங்கி கிளையில் 2 பயனாளிகளுக்கு ரூ.35 இலட்சம் மதிப்பில் வீடு அடமானக் கடன் மற்றும் 3 பயனாளிகளுக்கு ரூ.25 இலட்சம் மதிப்பில் இட்டுவைப்பு தொகைக்கான ஆணை வழங்கப்பட்டது.

தொடர்ந்து, குருபரவலசை, நடூர், கோனேரிக்குப்பம் ஆகிய 3 புதிய பகுதிநேர நியாய விலைக்கடைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நியாய விலைக் கடை திறப்பால் 483 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவார்கள் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் நடராஜன், நகர கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் பாலமுருகன், பொது மேலாளர் தங்கவேலு, பர்கூர் பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார், வட்டாட்சியர் சின்னசாமி, வட்ட வழங்கல் அலுவலர் செந்தில் மற்றும் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# எடப்பாடி அரசு போக்குவரத்து கழக பணிமனையில் புதிய எரிபொருள் சில்லரை விற்பனை நிலையத்தினை திறந்து வைத்து புதிய வழித்தடம் மற்றும் வழித்தட நீட்டிப்பு சேவை

## அமைச்சர்கள் இரா.இராஜேந்திரன், எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் தொடங்கி வைத்தனர்



**சேலம்,ஜன.05-**

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சார்பில், சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு போக்குவரத்து கழக பணிமனையில் புதிய எரிபொருள் சில்லரை விற்பனை நிலையத்தினை திறந்து வைத்து, 63 புதிய மகளிர் விடியல் பயண பேருந்துகள், புதிய வழித்தடம் மற்றும் வழித்தட நீட்டிப்பு சேவையினை (04.01.2026) தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மகளிர்களுக்கான வெற்றித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக கணக்கை தொடங்கியதில் "விடியல் பயண திட்டம்" முதன்மையானதாகும். பொறுப்பேற்ற உடன் கையெழுத்திட்ட 5 கோப்புகளில் விடியல் பயண திட்டமும் ஒன்றாகும். மாற்றுத்திறனாளிகளும் பயனடையும் வகையிலான தாழ்தள பேருந்துகள், தனியாரை மிஞ்சும் ஆம்னி சொகுசு பேருந்துகள் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக நவீனமயமாக்கப்பட்டு வருகிறது.

மேலும், மகளிர் விடியல் பயணம் திட்டத்தில் சேலம் மண்டலத்தில் நாள்தோறும் 5.88 இலட்சம் மகளிர் பயணங்கள் மேற்கொண்டு வருகின்றனர். சேலம் மண்டலத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 256 புதிய பேருந்துகள் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. மண்டலத்தில் இயக்கப்படும் நகர பேருந்துகளில் 95% பேருந்துகள் மகளிர் விடியல் பயணம் திட்டத்தில்" இயக்கப்படுகிறது. அகில இந்திய போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பில் 2024ல் 4 தேசிய விருதுகளை பெற்று சேலம் மண்டலம் சாதனை படைத்துள்ளது. தினந்தோறும் பள்ளி, கல்லூரிகளில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. பேருந்து இயக்க வருவாயை தவிர்த்து பிற இனங்கள் வருவாயில் சேலம் மண்டலம் முதலிடம் பெற்று வருகிறது.

மேலும், டிஜிட்டல் பரிவர்த்தனையில் புறநகர் போக்குவரத்து கழகங்களில் சேலம் முதலிடம் பெற்று வருகிறது. இன்றைய தினம் போக்குவரத்து கழகத்தின் சார்பில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் சேலம் மண்டலத்தின் 2-வது சில்லறை விற்பனை நிலையம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகமானது நல்லாட்சிக்கு அடித்தளம் அமைத்த துறையாகும். பல்வேறு சாதனை படைத்து வரும் சேலம் மண்டலத்திற்கும், தொழிலாளர்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் சிறப்பு மிக்க துறையாக உருவெடுத்து வருகிறது. அதன் அடிப்படையில் சில்லறை விற்பனை நிலையங்கள் துவங்கிட தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பணிமனைகளில் எங்கு இடங்கள் இருக்கிறதோ அதை கண்டறிந்து அங்கு சில்லறை விற்பனை நிலையங்கள் துவங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இதுவரை 6 எரிபொருள் சில்லறை விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளது. சேலம் போக்குவரத்துக் கழகத்தில் முதற்கட்டமாக இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனம் மூலமாக நாமக்கல் மாவட்டம், அத்தனூரில் எரி பொருள் சில்லறை விற்பனை நிலையம் 28.07.2024 அன்று முதல் துவக்கப்பட்டு இயங்கி வருகிறது. தற்போது இதன் தொடர்ச்சியாக எடப்பாடி கிளை வளாகத்தில் துவங்கப்பட்டுள்ளது.

இன்றைக்கும் இந்திய அளவில் அதிக அரசு பேருந்துகளை கொண்ட நிறுவனமாக இருப்பது நமது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம். தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றப்பிறகு 11,328 பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். இதில் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ள 63 பேருந்துகள் உட்பட 6,844 பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

அந்தவகையில், இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சேலம் கோட்டம் சார்பாக எடப்பாடி கிளை வளாகத்தில் இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனம் இணைந்து அமைத்துள்ள எரிபொருள் சில்லறை விற்பனை நிலையம் இன்றைய தினம் துவக்கி வைத்து, தற்சமயம் இயங்கிவரும் நகர வழித்தடப் பேருந்துகளுக்கு பதிலாக சேலம் கோட்டத்திற்கு 20 புதிய மகளிர் விடியல் பயண பேருந்துகளும், தருமபுரி கோட்டத்திற்கு 43 புதிய மகளிர் விடியல் பயண பேருந்துகளும் என மொத்தம் 63 புதிய மகளிர் விடியல் பயண பேருந்துகளை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி மாணவ மாணவிகள், மகளிர் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 1 நகரப் பேருந்துகள் புதிய வழித்தடத்திலும், 5 நகரப் பேருந்துகள் மற்றும் 1 புறநகர் பேருந்து என மொத்தம் 6 பேருந்துகள் வழித்தடம் நீட்டிப்பு செய்தும், 1 புறநகர் நகர பேருந்து நிறுத்தமும் கொடியசைத்துத் துவக்கி வைக்கப்பட்டது.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் கோரிக்கையான ஊதிய ஒப்பந்தம் சரிசெய்யப்பட்டு முதல் பேச்சுவார்த்தையில் 5 சதவிகிதம் ஊதிய உயர்வும், இரண்டாம் பேச்சுவார்த்தையில் 6 சதவிகிதம் ஊதிய உயர்வும் வழங்கப்பட்டது. மேலும், தொழிலாளர்கள் நலன் காக்கும் முதல்வராக நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்ந்து வருகிறார்கள். மகளிர் விடியல் பயணம் வெற்றிகரமாக நடப்பதற்கு முக்கிய காரணம் இங்கே பணியாற்றும் நடத்துனர் மற்றும் ஓட்டுநர்கள் தான். இவ்வாறு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், கலெக்டர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் வெ.குணசேகரன், பொது மேலாளர் (சேலம்) டி.மோகன்குமார், பொது மேலாளர் (தருமபுரி) கே.செல்வம், பொது மேலாளர் (தொழில் நுட்பம்) ந.கலைவாணன், எடப்பாடி நகர் மன்றத் தலைவர் டி.எஸ்.எம்.பாஷா, முதுநிலை துணை மேலாளர் (மனிதவள மேம்பாடு) க.ராஜராஜன் மற்றும் தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டம், பிலிக்கல்பாளையம் முதல் கொடுமுடி வரை உடனடியாக உயர்மட்ட பாலம் அமைக்க வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்

## முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி பங்கேற்பு



**நாமக்கல்,ஜன.05-**

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி ஆணைக்கிணங்க, நாமக்கல் மாவட்டம், பிலிக்கல்பாளையம் முதல் கொடுமுடி வரை காவிரி ஆற்றின் குறுக்கே கழக ஆட்சியில் அறிவித்த காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கும் திட்டத்தை கிடப்பில் போட்டு வைத்திருக்கும் தி.மு.க அரசை கண்டித்து, கபிலர்மலை ஒன்றியம், பில்லிக்கல்பாளையம், மல்லிகாபுரம் பேருந்து நிலையம் அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பரமத்தி வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பொறியாளர் எஸ்.சேகர் தலைமையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் அதிமுக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.தங்கமணி கலந்துகொண்டு கண்டன உரை நிகழ்த்தினார். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மகளிர் அணி இணைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மருத்துவர் வெ.சரோஜா உட்பட அனைத்து மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்



**தர்மபுரி,ஜன.05-**

தர்மபுரி மாவட்டம் ஏரியூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பெரும்பாலையில் எங்கள் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் நடைபெற்றது இதில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் எப்படி பணியாற்ற வேண்டும் திமுக மக்களுக்கு அளித்த சாதனைகளை பொதுமக்களுக்கு எடுத்துரைத்தனர் 2026 யில் திமுக ஆட்சி அமைக்க வேண்டும் அதற்கு கட்சி தொண்டர்கள் உழைக்க வேண்டும் என திமுக தொகுதி பார்வையாளர். பாரி பேசினார். மாநில பொதுக்குழு உறுப்பினர் சோலைமணி ஏரியூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துசாமி மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் துரைசாமி மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சாந்தரூபன் மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர்.ஆசி. தனபாலன் ஒன்றிய கழக கலை இலக்கிய அணிதுணை அமைப்பாளர் முருகேசன் மாணவரணி அமைப்பாளர் நஞ்சப்பன் கிளைச் செயலாளர் சிவக்குமார் சுப்பிரமணி நாகப்பன் உள்ளிட்ட நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.( படம் விளக்கம்) பெரும்பாலையில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் நடைபெற்றது.

# ராசிபுரம் ஸ்ரீ வித்யா மந்திர் கல்வி நிறுவனங்களில் 47-வது விளையாட்டு விழா மற்றும் ஆண்டு விழா

**ராசிபுரம்,ஜன.05-**

ராசிபுரம் ஸ்ரீ வித்யா மந்திர் கல்வி நிறுவனங்களில் 47வது விளையாட்டு விழா மற்றும் ஆண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலைவர் டாக்டர் சி. நடராஜ் விழாவிற்கு தலைமையேற்று தலைமையுரையாற்றினார். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் முதல்வர் டாக்டர் பி.கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினர் எம்.சபரிநாதன் முன்னாள் மாணவர், காவல் கண்காணிப்பாளர், வாழப்பாடி, சேலம் மாவட்டம் விளையாட்டு விழாவினை துவக்கி வைத்து மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அவர் தம் உரையில் மாணவர்கள் விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கி உடலை வலுப்படுத்த வேண்டும் என்றும் விளையாட்டில் சிறந்து விளங்குபவர்களுக்கு விளையாட்டு ஒதுக்கீட்டின் மூலம் நல்ல வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது என்று கூறி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். நிறைவாக ஸ்ரீ வித்யா மந்திர் இன்டர்நேஷனல் சீனியர் செகண்டரி பள்ளி முதல்வர் சி.புனிதா நன்றியுரையாற்றினார்.

ஆண்டு விழாவில் பள்ளியின் செயலர் வி. சுந்தரராஜன் வரவேற்புரையாற்றினார். மெட்ரிக் பள்ளியின் முதல்வர் டாக்டர் பி. கிருஷ்ணமூர்த்தி, சிபிஎஸ்சி பள்ளி முதல்வர் சி. புனிதா மற்றும் கல்வியியல் கல்லூரி முதல்வர் டாக்டர் சி.வேல்முருகன் ஆகியோர் ஆண்டறிக்கையை வாசித்தனர். சிறப்பு விருந்தினராக பேராசிரியர் சி. முத்தமிழ்செல்வன், துணைவேந்தர், எஸ்.ஆர். எம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி, எஸ்ஆர்எம் பல்கலைக்கழகம் கலந்து கொண்டு அவர்தம் உரையில் மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் நல்ல உடல் நலம், தேச பக்தி, தெய்வ பக்தி வேண்டும், மனிதனை சிந்திக்க வைக்க வேண்டும் என்றும் கூறினார். நிறைவாக மெட்ரிக் பள்ளியின் முதல்வர் டாக்டர் பி. கிருஷ்ண மூர்த்தி நன்றியுரையாற்றினார். விழாவில் மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இவ்விழாவில் பள்ளியின் பொருளாளர் வி.இராமதாஸ், கல்வியியல் கல்லூரி சேர்மன் டாக்டர் கே. குமாரசாமி, சிபிஎஸ்இ பள்ளி சேர்மன் இன்ஜினியர் என். மாணிக்கம், நிறுவனத் தலைவர் டாக்டர் ஆர்.எம் கிருஷ்ணன், ஆர்விஇடி செயலர் எஸ்.சந்திரசேகரன், துணைத் தலைவர் டாக்டர் எம்.இராம கிருஷ்ணன், இயக்குநர் ஆர். பெத்தண்ணன், இணைச் செயலர் வி.பாலகிருஷ்ணன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ்.ஹரி பிரசாந்த், உறுப்பினர்கள், ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் மாணவ மாணவிகள் விழாவில் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரியில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த 200 பேர் த.வெ.க.வில் இணைந்தனர்




**கிருஷ்ணகிரி,ஜன.05-**

கிருஷ்ணகிரி மத்திய மாவட்டம், கிருஷ்ணகிரி நகரத்தில், தமிழக வெற்றி கழகம் சார்பில் மாற்றுக் கட்சியை சேர்ந்த 200 பேர் நகர செயலாளர் M.சசிகுமார் தலைமையில், கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட கழக செயலாளர் ஜி. சுரேஷ், மாவட்ட இணைச் செயலாளர் முகுந்த் ஆர்.பாண்டியன், ஆகியோர் முன்னிலையில் இணைந்தனர். குறிப்பாக கிருஷ்ணகிரி நகரத்தை சேர்ந்த 4வது வார்டு பகுதியில் உள்ள முஸ்லீம்கள், பல்வேறு கட்சியில் இருந்து தமிழக வெற்றி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். முன்னதாக த.வெ.கவில் இணைந்த அனைவருக்கும் கழக துண்டு அணிவித்து வரவேற்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நகரச் செயலாளர் சசிகுமார் பேசும்போது, கழகத் தலைவரின் கடைசி படமாக ஜனநாயகன் திரைப்படத்தை மாபெரும் வெற்றியடைய செய்ய வேண்டும் எனவும், வருடம் 500 கோடி ரூபாய் திரைதுறையில் வரும் வருமானத்தை விட்டுவிட்டு, மக்களுக்காக சேவை செய்ய வருகை தரும் கழகத் தலைவர் விஜயை நீங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டதற்கு நன்றியினை தெரிவித்துக் கொண்டார். மத்திய மாவட்ட செயலாளர் சுரேஷ் பேசும்பொழுது, கழகத்தில் இணைந்த அனைவரையும் மனதார வாழ்த்தி வரவேற்பதாகவும், ஆளும் கட்சியினர் மக்களை கண்டு கொள்ளாமல் இன்னலுக்கு ஆளாக்கி வருவதாகவும், இவற்றையெல்லாம் சரி செய்ய, நமது கழக தலைவர் விஜய் அவர்களை 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆட்சி கட்டிலில் அமர வைக்க, புதியதாக தமிழக வெற்றி கழகத்தில் சேர்ந்த அனைவரும் பொறுப்புணர்வுடன், அயராது பாடுபட வேண்டும் என அறிவுறுத்தினார். இதைத் தொடர்ந்து, பள்ளி மாணவ, மாணவிகள் ஏராளமானோருக்கு நல திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# கிருஷ்ணகிரியில் ஹஸ்ரத் மௌலா அலியின் பிறந்த நாளினை முன்னிட்டு சிறப்பு துவா



**கிருஷ்ணகிரி,ஜன.05-**

கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகில் சுமார் 450 ஆண்டுகள் பிரசித்தி பெற்ற சங்கல் தோப்பு ஹஸ்ரத் சையத் பாஷா தர்காவில் ஹஸ்ரத் மௌலா அலி அவர்களின் பிறந்தநாளினை முன்னிட்டு தமிழ்நாடு தர்காக்கள் பேரியக்கம் சிறப்பு துவா மேற்கொள்ளப்பட்டது. இதன் முன்னதாக சங்கல் தோப்பு ஹஸ்ரத் சையத் பாஷா தர்காவில் சிறப்பு பிராத்தனை மற்றும் துவா நடைபெற்றது. இதனைத்தொடர்த்து தர்காக்கள் பேரியக்கம் மாநில தலைவர் ஆசாத் காதிரி தலைமையில் ஹஸ்ரத் மௌலா அலி அவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள கொடி மரத்திற்கு வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்ட நிலையில் கொடி மரத்தில் கொடியினை ஏற்றி வைத்து சிறப்பு துவா மேற்கொண்டார் இந்த சிறப்பு துவாவின் போது உலக மக்கள் யாவரும் நல்ல உடல் ஆரோக்கியமாக வாழவும் நல்ல மழை பொழிந்து விவசாயம் செழித்திட வேண்டியும் பிராத்தனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இந்த விழாவிற்கு சௌகத் மஜித் தலைவரும் தர்கா கமிட்டி செயலாளருமான கவுஸ் ஷெரிப் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அனைவருக்கும் இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கி சிறப்பித்தார் இந்த விழாவின்போது தர்காக்கள் பேரியக்கத்தின் மாநிலச் செயலாளர் உம்மர் பாஷா, நகரச் செயலாளர் ஆனந்த் மற்றும் பேரியக்கத்தின் நிர்வாகிகளான அஷ்ரப்,ஜியாமுகமத் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்

## வாக்காளர் பட்டியல் பார்வையாளர் தலைமையில் நடைபெற்றது

**நாமக்கல்,ஜன.05-**

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் நகராட்சி அலுவலகத்தில் (04.01.2026) சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் / வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ஏ.ஆர்.ராகுல் நாத், தலைமையில் மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் துர்காமூர்த்தி, முன்னிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்-2026 தொடர்பாக அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் / வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ஏ.ஆர்.ராகுல் நாத், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள 2002 வாக்காளர் பட்டியலுடன் தொடர்புபடுத்த இயலாத வாக்காளர்களை விசாரணை செய்து விரைவில் முடிக்கவும், சிறப்பு முகாம்களில் பெறப்படும் படிவம்-6, 7 மற்றும் 8 ஆகியவற்றை விரைவில் முடிவு செய்ய வேண்டும் எனவும் வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் / வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ஏ.ஆர். ராகுல் நாத், மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் துர்காமூர்த்தி, முன்னிலையில், பள்ளிபாளையம் வட்டம், குப்பாண்டம்பாளையம் ஊராட்சி, சாணார்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் விட்டலபுரி ஜே.கே.கே.ரங்கம்மாள் தொடக்கப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் முகாமினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் மா.க.சரவணன், வாக்காளர் பதிவு அலுவலர்களான மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் முருகன், தனித் துணை கலெக்டர் (ச.பா.தி.) சு.சுந்தரராஜன், வருவாய் கோட்டாட்சியர்கள் வே.சாந்தி (நாமக்கல்), பி.எஸ்.லெனின் (திருச்செங்கோடு), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மு.கிருஷ்ணவேணி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கே.ஏ.சுரேஷ்குமார், தனி வட்டாட்சியர்கள் (தேர்தல்) செல்வராஜ், ராஜேஷ் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months thereafter, I, Stanely Selva, S/o Issac, aged 29 years permanently residing at 90/105 A, West Street, Tirukkoilur, Post: Tirukkoyilur, District: Kallakurichi, Tamil Nadu – 605757, intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu & Puducherry, Bar Council Building, High Court Campus, Chennai – 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

I.STANELY SELVA

